# தாதிமை தொடர்பான புதிய பாடத்திட்டங்கள்

'சுகாதாரப் பராமரிப்பு மனிதவள 2020' திட்டத்தின் கீழ், சுகாதாரப் பராமரிப்பு ஊழியரணியின் திறன்களை வளர்க்க புதிய உயர்கல்வி பாடத்திட்டங்கள் இவ்வாண்டு அறிமுகம் காணவுள்ளன.

♦ சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் புதிய ஈராண்டு தாதிமை இளநிலை பட்டப்படிப்பை அறிமுகம் செய்யவுள்ளது. இது பதிவு பெற்ற தாதியருக்கான நிபுணத்துவ மாற்றுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

♦ சமூக சுகாதாரத் தாதிமைத் துறையில் பகுதி நேர இளநிலை பட்டயப் படிப்பை (Graduate diploma) சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் வழங்கவுள்ளது. தாதியராகப் பணிபுரிந்தவாறே பகுதி நேரமாகப் படித்து இந்தச் சான்றிதழைப் பெற முடியும்.

♦ தொழில்நுட்பக் கல்விக் கழகம் மறுவாழ்வுப் பராமரிப்புத் துறையில் வேலை செய்துகொண்டே கற்கும் தொழில்நுட்பப் பட்டயப்படிப்பைத் தொடங்க உள்ளது. இது உதவி சிகிச்சையாளர்கள் தங்கள் திறனையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள உதவும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.